**OS. No. 6 /2022**

P.W.1 - **அஞ்சனா**

தேதி: 04.09.2023

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு 1ம் பிரதிவாதி மகாலட்சுமி மீது தாக்கல் செய்துள்ளேன். எனக்கு ஆங்கிலத்தில் எழுத படிக்க தெரியாது, எனக்கு தமிழில் மட்டும் தான் எழுத படிக்க தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தை யார் எழுதியது மற்றும் அதில் உள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. நான் இல்லதரசியாக உள்ளேன் வேலைக்கு எதுவும் செல்லவில்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் ரூ.50,000/– எந்த தேதியில் கொடுத்தேன் என்று தேதி மாதம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேலும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் ரூ.6,50,000/– யாரிடம் எந்த தேதியில் கொடுத்தேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் வங்கியில் பணம் செலுத்தியதாக சொல்லப்படும் 2 வங்கி கணக்கு எண்களில் எவ்வளவு ரூபாய் பணம் எந்த தேதியில் செலுத்தினேன் என்று என்னுடைய நிரூபண வாக்குமூலம் மற்றும் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் பிராதில் பணம் செலுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது 1ம் பிரதிவாதியின் சொத்திற்கு ஆகும். 16.08.2019ம் தேதியில் 1ம் பிரதிவாதிக்கு நேரடியாகவோ வங்கி மூலமாகவோ பணம் செலுத்தியதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ளபடி 3 மாத காலக்கெடுவுக்குள் எந்தவிதமான எழுத்துபூர்வமான அறிவிப்பும் 1ம் பிரதிவாதிக்கு நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் கேட்டுக்கொண்டிருந்தேன். தாவா சொத்து 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. அந்த சொத்தின் புல எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எந்தவிதமான பரிவர்த்தனையும் கிடையாது என்றும்

உண்மைக்கு மாறாக வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தி நான் 1ம் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே தான் அந்த ஆவணத்தை யார் எழுதியது யார் ஏற்படுத்தியது தெரியவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் யாரும் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரியல்ல. எல்லா விவரங்களும் என் கணவருக்கு தான் தெரியும் என்றால் பணம் நான் தான் கொடுத்தேன். நான் 1ம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH